CASE NO. CC 248/2018

Date 24.07.2025

பெயர் PW 1 – உமர் த/பெ மீராராவுத்தர்

**<u>(மனுதாரர் ஆஜரில்லை. BNSS பிரிவு 279ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).</u>**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் தெரியுமா என்றால் தெரியும். நிரூபண வாக்குமூலம் வழக்கறிஞர் தயார் செய்யும் போது நான் வயநாட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல நான் ஊரில் தான் இருந்தேன். வழக்கை திரும்ப கோப்பிற்கு எடுக்க தாக்கல் செய்த மனுவில் நான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்த போது வயநாட்டில் இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் தெரியவில்லை.

2) நான் நேரடியாக சொல்லி வழக்கறிஞர் மூலம் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றும் அதிலுள்ள கையொப்பம் எங்கு வைத்து போடப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு பணம் தேவை இருந்தது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 1 லட்சத்திற்கு 8 சதவீதம் வட்டி வாங்கியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

3) ரூபாய் 1 லட்சத்தி 70 ஆயிரத்திற்கு 2 சதவீதம் வட்டியாக மனுதாரர் வசூலித்துள்ளார் என்றால் சரியல்ல. ஜோசப் என்பவர் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். ஜோசப் கையெழுத்திட்ட பிராமிஸ் நோட்டின் நகல் இருப்பதாக பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். ஜோசப்

கையெழுத்திட்ட பிராமிஸ் நோட்டின் நகல் என்னிடம் இருப்பதாக பதில் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் எனக்குத் தெரியவில்லை.

4) நான் மனுதாரருக்கு ரூபாய் 1,60,000 /- திருப்பி செலுத்தியதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் புதிதாக வங்கிப் புத்தகம் தொடங்கி மனுதாரரிடமிருந்து காசோலைப் கொடுத்து அவரை ஏமாற்ற வேண்டும் நோக்கில் செயல்பட்டேன் என்றால் சரியல்ல. மதகுப்பட்டி காவல் நிலையத்தில் மனுதாரர் மீது கந்துவட்டி கேட்டதாக புகார் அளித்தது சம்பந்தமான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5) நான் மதகுப்பட்டி காவல் நிலையத்தில் மனுதாரர் மீது புகார் கொடுத்தாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் முரளி, ஜோசப் ஆகியோர்களுக்கு வழக்கு சம்பவம் தெரியும் என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் மனுதாரரிடம் பணம் வாங்கிவிட்டு காசோலை கொடுத்து ஏமாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. CC 143/2021 வழக்கு சம்பந்தமான விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் வழக்கறிஞர் சொல்லித் தெரியும்.

6) நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யாகவும் திரித்துக் கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மை என்றும் வாதியை ஏமாற்ற வேண்டும் நோக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வாதியிடம் கடன் பெற்று அதற்கு வங்கி காசோலை கொடுத்து ஏமாற்றியுள்ளேன் என்றும் நான் வாதியிடம் வாங்கிய கடனை சட்டப்படியாக திரும்பச் செலுத்துவற்கு கடமைப்பட்டவன் என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SELVAM P

Digitally signed by SELVAM P
Date: 2025.07.25 16:35:10 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.